பாடலைத் தொடர்ந்தே சென்றேன்...35.

( By Visali Sriram )

இன்றைய பதிவு 1962,பி.ஸ்.வி.பிக்ஸர்ஸ்,ஆலயமணி....கவியரசரின் வரிகள்,மெல்லிசை மன்னர்களின் இசையில்,சுசீலாம்மாவின் ....மானாட்டம் தங்க மயிலாட்டம்...

தரையிலேயெ கால் பாவாமல் பாவாடை தாவணியில் துள்ளி வரும் சரோஜாதேவிக்கு வெள்ளமென அமுத ஊற்றாய்ப் பெருகிவரும் அம்மாவின் குரல்...

காட்சி காணொளியில் அவசியம் ஒவ்வொருவரும் பார்க்க வேண்டியது..ரசித்துக் களிக்க வேண்டியது..

தியாகு எஸ்டேட்ஸ் என்ற பெயர் பலகை,தொடர்ந்து தியாகுவாகிய நடிகர் திலகத்தின் என்ட்ரீ...ஒரு திறந்த தரையில் நின்றிருக்கும் ஓடாத ஜீப்பை ஓடுவதாகவே நம்மையெல்லாம் தம் பாவனையால் கிறங்கடித்து இங்கும் அங்கும் அலைபாயும் கண்களால்,குரல் வந்த திக்கைத் தேடிக்கொண்டு வரும் ஒரு தேடி வந்தேனே புள்ளி மானே காட்சி..

நடிகர் திலகத்தின் வரவை எதிர் பாராமல் தன் மனதில் உள்ள காதலன் எஸ்.எஸ்.ஆரை நினைத்துக் கொண்டு புள்ளிமானாய்த் துள்ளி வரும் மீனா....

இயற்கையோடு இணைந்த வரிகள்...மானாட்டம் தங்க மயிலாட்டம்..பூவாட்டம் வண்ணத் தேரோட்டம்..தானாடும் மங்கை சதிராட்டம்

கண்டு தேனோடும் எங்கும் நதியாட்டம்....

டகாரத்திலே சிடுக்கு முடித்த கவியரசரின் வரிகளை அனாயாசமாக தேன் குரலில் தூவி வரும் சுசீலாம்மா...

பாடல் ஆரம்பம் வயலினில்....அந்த வேகமே சொல்லும் காட்சியின் ரம்யத்தை..உபயம்..மெல்லிசை மன்னர்கள்..மங்கையின் மானாட்டம்,தங்க மயிலாட்டம் ஆடும் சதிராட்டத்தைக் கண்டு தேனோடும் எங்கும் நதியாட்டம்...ஆட்டத்தை தொடரும் தாளம்...இன்னும் ரீங்காரம்...

இங்கு சுசீலாம்மாவின் குரலின் தேன் ப்ரவாகத்தை கவியரசர் உணர்ந்து எழுதியிருக்க வேண்டும்...அம்மாவும்...பூந்தென்றலில் தேன் கலந்து வாரி இரைத்துக் கொண்டு....தொடரும்....ஒரு ஓ ஓ ஓ....அது ஓஹோ...

முதல் சரணம் தமிழ் கூறும் நல்லுலகுக்கு ஒரு சொற்சிலம்பம்...

செண்டிருக்கும் அதில் வண்டிருக்கும் அதைக் கண்டிருக்கும் கண்கள் வந்திருக்கும்..சொல்லிருக்கும் அதில் சுவையிருக்கும் இன்பத் துணையிருக்கும் நெஞ்சில் உறவிருக்கும்...ஒளித்து வைத்துள்ள அக் காதல் சொல்ல

செண்டு,வண்டு,கண்டு...சொல்,சுவை...அப்பப்பா...இனிமைக்கு இனிமை சேர்க்கும் வரிகளுக்கு கற்கண்டு இசையும்...தேன் மழையும்...

பாய்ந்து வரும் கண்கள் மேய்ந்து வரும் தலை சாய்ந்து வரும் வெட்கம் சேர்ந்து வரும்..ஆடிவரும் வெள்ளம் பாடி வரும் பெண்ணைத் தேடி வரும் இன்பம் கோடி பெறும்...

கண்கள் மேய்ந்து வரும் இது தியாகுவுக்கும் பொருந்தும்....வெட்கம் சாய்ந்து வருமாம்....அது என்ன சாய்ந்து வரும் வெட்கம்....பெண்கள் காதலில் வெட்கப் படும்போது தன்னை அறியாமல் காலால் நிலம் அளக்கணும்....தலை சாயணும்...

வெள்ளம் போல பாடிக் கொண்டு வரும் பெண்ணைத் தேடிக் கொண்டு வரும் இன்பம் கோடிக்கு சமமாம்...

இந்தப் பாடல் ஆங்கிலத்தில் சொல்வது போல ஒரு பொயடிக் பியூட்டி...

வரிகளில் இளமை,இசையில் இனிமை...பாடியிருக்கும் சுசீலாம்மாவின் குரல் மேன்மையான மென்மை.... அம்மாவிடம் துள்ளி துள்ளி சதிராடியிருக்கிறது...பாடலைத் தொடர்ந்து செல்கிறேன் உங்களுடன் நான்...பாடல் இறுதியில் வரும் ஓ ஓ ஓ......ஒலித்துக் கொண்டே இன்னமும்... http://www.youtube.com/watch?v=dUTn9N0OgfQ

Maanaattam Thanga Mayilattam - Saroja Devi & Sivaji Ganesan - Aalayamani

Watch Saroja Devi & Sivaji Ganesan in the classic song Maanaattam Thanga Mayilattam from the...
YOUTUBE.COM

LikeLike · · Share · 3021

- Rajeshkumar Venkatasubramanian, Aravind Karthik, Rajeswari Narayanan and 27 others like this.
  - **Rajeshkumar Venkatasubramanian** இது பாடல் அல்ல குரலும் அழகும் சேர்ந்து நம்மை எங்கோ கொண்டு செல்லும் ஒரு இசை படகு ...
    October 6 at 8:20am · Like · 2
  - **Rajeswari Narayanan** மானாட்டம் +தேனோடும் = சரோஜாதேவி +சுசீலா
    October 6 at 8:37am · Like · 3

- **Sumathi Svr** nammaiyum thullaveikkum padal ethu
  October 6 at 8:54am · Edited · Like

- **Kannan Rajagopalan** எனக்குமிகப் பிடித்த பாடல்..ஆரம்பமாவதும் தெரியாது முடிவதும் தெரியாது..
  October 6 at 9:45am · Like · 1

- **Rajeshkumar Venkatasubramanian** சி.க சரியா சொன்னீர்கள்
  October 6 at 9:55am · Like

- **Meenal Tamilselvan** after 3 days. naan facebook paarkiren,athanaal indru enmel susilaamma isai malaiyaaga peigirathu.
  October 6 at 9:58am · Like · 1

- **Rajeshkumar Venkatasubramanian** Meenal Tamilselvan Nam mel pozhiya pogiradhu
  October 6 at 10:00am · Like · 1

- **Susi Priya** Super song.. Intha padalil yarai rasipathu saroja ammavin thullalaiya.... Allathu nam susheela ammavin theyn kuralaiya... Arumai Arumai... Thank u mam..
  October 6 at 11:53am · Like · 1

- **Boston Ganesh** DIVISION OF RHYTHM,PALLAVI-GREAT DOLAK....... SARANAMS- GREAT TABHLA......
  October 6 at 1:31pm · Like · 1

- **Srikanth Orn** மானாட்டம் தங்க மயிலாட்டம்.....சொற்கள் சிலம்பாட்டம்.....
  October 6 at 3:32pm · Like

- **Indira Raghavan** Very nice song. Ever green.
  October 6 at 4:35pm · Like

- **Nagesh Kumar** This is the Tamizh equivalant of the Telugu song "Doorana Neeli Meghalu..." also by PS that P M Subbaraya Sastry sir posted sometime back.....
  October 6 at 6:21pm · Like · 3

- **Krishnamurthi Balaji** my ever favorite song! Reminded of those days when I struggle to get this recorded in cassette
  October 6 at 8:20pm · Like · 2

- **Thenmozhi Arul** எனக்கு மிக மிகப்பிடித்த பாடல். பகிர்ந்தமைக்கு நன்றி!
  October 6 at 10:55pm · Edited · Like

- **Gandhi Priya** Mam my favourite one.. Thank u mam
October 7 at 2:16am · Like

- **Rajeshkumar Venkatasubramanian** Nagesh Kumar yes both are same movie aalaya mani in tamil Gudi gantalu in Telugu
October 7 at 3:59am · Like

- **Vicky Iyengar** Idhi Dubbing Paata: "Doorana Neeli Meghalo" from Telugu film "Gudi Gantalu". Chaala Manchi Paata. Ammavari's voice cascades. Ee version clearga vuntundhi (i mean longer
www.youtube.com/watch?v=fEOu78SSyfA

Gudi Gantalu Movie Song 3 - Doorana Neeli Megalu

http://www.studiooneonlinetv.comgo to above website to...
YOUTUBE.COM

October 9 at 2:18am · Edited · Like · Remove Preview

- **Rajeshkumar Venkatasubramanian** Vicky Iyengar idhi dubbing kaadhu... simultaneous production, tamillo sarojadevi heroine, telugulo krishnakumari..
October 9 at 6:23am · Like

- **Vicky Iyengar** Rajeshkumar Venkatasubramanian: Thanks for the info Andi. Usually most tamil films are dubbed into Telugu Kaadha..
October 9 at 6:24am · Like

- **Rajeshkumar Venkatasubramanian** MGR sivaji movies dubbing chesaru, sometimes remake, simultaneous kooda undi.... vijaya movies anni simultaneous productionse, same with few movies like manchi chedu , intiki deepam illale ivi annai remade in telugu
October 9 at 6:27am · Edited · Like · 1

- **P M Subbaraya Sastry** Your Are Correct Mr.Rajeshkumar Venkatasubramananian In Defining The Difference Between Remade And Dubbing. In Remade There Is Every Chance, Rather Difinite Changes In Story Line According To Regionality Of Movie. Telugu Bharya Bharthalu 1961 Remade As...See More
October 9 at 7:06am · Unlike · 2